**நவம்பர் – 01**

# TNPSC துளிகள்

- இந்திய ரிசர்வ் வங்கி ஆளுநர் சக்திகாந்த தாஸ் அவர்கள், 2024 ஆம் ஆண்டு மத்திய வங்கி மதிப்பீட்டுத் தரவரிசையில் தொடர்ந்து இரண்டாவது ஆண்டாக 'A+' தரத்தைப் பெற்றுள்ளார்.
- குளோபல் ஃபைனான்ஸ் இதழில் 2024 ஆம் ஆண்டிற்கான 'இந்தியாவின் சிறந்த வங்கி' ஆக பாரத் ஸ்டேட் வங்கியானது (SBI) அறிவிக்கப்பட்டுள்ளது.
- சவூதி அரேபியக் கடற்படையானது, சமீபத்தில் ஓமன் கடலில் நடைபெற்ற ஈரானியக் கடற்படையுடனான ஒரு கூட்டுக் கடற்படைப் பயிற்சியை மற்ற நாடுகளுடன் சேர்ந்து நிறைவு செய்துள்ளது.
- சவுதி அரேபியாவின் ரியாத் நகரில் கட்டமைக்கப்பட உள்ள உலகின் மிகப்பெரியக் கட்டமைப்பான கன சதுர வடிவிலான முகாப் கட்டிடத்தின் கட்டுமானப் பணிகளைத் தொடங்கியுள்ளது.
- அசாமின் புகழ்பெற்ற வளங்காப்பு அறிவியலாளரான குமார் தாலுக்தாருக்கு IUCN அமைப்பின் இனங்களின் உயிர் பிழைத்தல் ஆணையத்தின் (SSC) பாதுகாப்புத் தலைமைத்துவத்திற்கான 'தி ஹாரி மெஷ்ஷெல் விருது' வழங்கப்பட்டுள்ளது.
- சர்வதேச ஏற்றுமதி ஜாம்பவான்கள் என்று பெயரிடப்பட்ட முதல் சர்வதேச ஏற்றுமதி சாம்பியன்ஷிப் போட்டியினை இந்தியா நடத்த உள்ளது.
- காத்மாண்டு ஜாஸ் திருவிழா என்றும் அழைக்கப்படுகின்ற அதன் 20வது நிகழ்வானது காத்மாண்டு பள்ளத்தாக்குப் பகுதிகளில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.
- 17வது நகர்ப்புறப் போக்குவரத்து இந்தியா மாநாடு & கண்காட்சியானது (2024) குஜராத்தின் காந்திநகரில் நடைபெற்றது.
    - இந்த நிகழ்வில் புவனேஸ்வருக்கு 'சிறந்த பொதுப் போக்குவரத்து அமைப்புகள் கொண்ட நகரம்' என்ற பட்டம் வழங்கப்பட்டது.


# தமிழ்நாடு செய்திகள்

## வெப்ப அலைகள் – குறிப்பிட்ட மாநிலம் சார்ந்தப் பேரழிவு


- தமிழகத்தில் அதிக எண்ணிக்கையிலான உயிரிழப்பு பதிவான நிலையில், மாநில அரசு வெப்ப அலையை ஒரு பேரிடராக அறிவித்துள்ளது.
- ஏற்கனவே சில மாநிலங்களான சத்தீஸ்கர், ஒடிஸா, கேரளா, ராஜஸ்தான், ஆந்திரப் பிரதேசம், மகாராஷ்டிரா, மற்றும் கர்நாடகா ஆகியன வெப்ப அலையினை மாநிலம் குறிப்பட்டப் பேரிடர்களாக அறிவித்துள்ளன.
- இந்தியாவில் வெப்ப அலைகள் தற்போது தேசியப் பேரிடராக அறிவிக்கப் படாததால், 2005 ஆம் ஆண்டு தேசியப் பேரிடர் மேலாண்மைச் சட்டத்தின் கீழ், ஒன்றிய அரசிடம் இருந்து இதற்காக நிதி உதவியினை மாநிலங்கள் பெற இயலாது.
- இந்த ஒரு அறிவிப்பின் மூலம், வெப்ப அலையால் பாதிக்கப்பட்டக் குடும்பங்களுக்கு 4 லட்சம் ரூபாய் நிவாரணம் வழங்கப்படும்.
- இந்த முயற்சிகளுக்கு வேண்டி மாநில அரசாங்கம் மாநிலப் பேரிடர்ப் பதிலெதிர்ப்பு நிதியினைப் பயன் பயன்படுத்தும்
- கோடைக் காலங்களில் ஈரப்பதம் அதிகரிக்கும் வகையிலான நீண்டக் கடற்கரையை

தமிழ்நாடு கொண்டுள்ளது.

- மதுரை, திருச்சி, வேலூர், நாமக்கல், திண்டுக்கல் மற்றும் கிருஷ்ணகிரி போன்ற நகரங்களில் இரவு நேரங்களிலும் வெப்பத்தை உறிஞ்சி வெளியிடும் பாறை குன்றுகள் உள்ளன.
- 2024 ஆம் ஆண்டு ஏப்ரல் மற்றும் மே மாதங்களில், ஈரோடு மற்றும் கரூர் ஆகிய சில மாவட்டங்களில் முறையே 31 மற்றும் 26 நாட்களுக்கு 40 டிகிரி செல்சியஸுக்கு மேல் வெப்ப நிலை பதிவாகியுள்ளது.
- வேலூர் மற்றும் திருப்பத்தூர் ஆகியவற்றில் தலா 23 மற்றும் 21 நாட்களுக்கு அதிக வெப்பநிலை பதிவாகியுள்ளது.




## 7,000 மெகாவாட் கூடுதல் மின்சாரத் தேவை




- மத்தியப் புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் (MNRE) ஆனது, ஒடிசா, மேற்கு வங்காளம், குஜராத், ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு (தூத்துக்குடி) மற்றும் கர்நாடகாவின் கடலோரப் பகுதிகளில் பசுமை ஹைட்ரஜன் / பசுமை அம்மோனியா

உற்பத்தி ஆலைகளை நிறுவுவதற்குத் திட்டமிட்டுள்ளது.

- பசுமை ஹைட்ரஜன்/பசுமை அம்மோனியா உற்பத்தியின் காரணமாக தமிழகத்திற்கு 7,000 மெகாவாட் கூடுதல் மின்சாரத் தேவை ஏற்படும்.
- பசுமை ஹைட்ரஜன்/பசுமை அம்மோனியா உற்பத்தியின் காரணமாக 2026-27 ஆம் ஆண்டிற்குள் ஒட்டு மொத்த மின்சாரத் தேவை சுமார் 10,500 மெகாவாட் ஆகும்.
- இதில் 1,500 மெகாவாட் தமிழ்நாட்டிலிருந்து வழங்கப்படும்.

# தேசியச் செய்திகள்

## குழந்தை திருமணம் பற்றிய NCPCR அறிக்கை

- தேசியக் குழந்தைகள் உரிமைகள் பாதுகாப்பு ஆணையத்தின் (NCPCR) அறிக்கையின் படி, 2023-24 ஆம் ஆண்டில் சுமார் 11 லட்சத்திற்கும் அதிகமான குழந்தைகள் குழந்தைப் பருவத்திலேயே திருமணம் செய்து வைக்கப் படும் மோசமான ஒரு நிலையை எதிர் கொள்ளும் நிலையில் உள்ளனர்.
- உத்தரப் பிரதேசம், தமிழ்நாடு மற்றும் ஆந்திரப் பிரதேசம் ஆகிய மாநிலங்கள் ஆனது குழந்தைத் திருமணத்தினை எதிர்த்துப் போராடுவதில் முன்னணியில் உள்ளன.
- சுமார் 5,00,000க்கும் மேற்பட்ட குழந்தைகள் எண்ணிக்கையினைக் கொண்ட உத்தரப் பிரதேசம் ஆனது, இந்தப் பிரச்சினையைத் தீர்ப்பதில் வலுவான சில நடவடிக்கைகளை மேற் கொண்டுள்ளது என்ற நிலையில் அதைத் தொடர்ந்து மத்தியப் பிரதேசம் மற்றும் ஒடிசா போன்ற சில மாநிலங்கள் இந்த நடவடிக்கையினை மேற்கொள்ளச் செய்வதில் முன்னணியில் உள்ளன.





## TATA விமானத் தயாரிப்பு வளாகம்

- இந்தியா மற்றும் ஸ்பெயின் ஆகிய நாடுகள் இணைந்து குஜராத்தின் வடோதராவில் அமைக்கப் பட்டுள்ள C-295 ரக விமானங்களைத் தயாரிப்பதற்கான டாடா விமானத் தயாரிப்பு வளாகத்தைத் திறந்து வைத்துள்ளன.
- C-295 திட்டத்தின் கீழ் மொத்தம் 56 விமானங்கள் தயாரிக்கப்படவுள்ளன.
- 16 விமானங்கள் ஆனது ஸ்பெயின் நாட்டில் உள்ள ஏர்பஸ் தயாரிப்பு நிறுவனத்தினால்

நேரடியாக வழங்கப்பட்டுள்ளது என்ற நிலையில் மீதமுள்ள 40 விமானங்கள் ஆனது இந்த வளாகத்தில் கட்டமைக்கப்பட உள்ளன.




## முத்ரா கடன்கள் 2024




- நாட்டில் தொழில் முனைவினை மேம்படுத்துவதற்காக பிரதான் மந்திரி முத்ரா யோஜனா (PMMY) திட்டத்தின் கீழ் பெறப்படும் முத்ரா கடன் தொகையின் வரம்பை அரசாங்கம் இரட்டிப்பாக்கியுள்ளது.
- புதிய 'தருண் பிளஸ்' பிரிவின் கீழ் இது 10 லட்சம் ரூபாயில் இருந்து 20 லட்சம் ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.
- பெருநிறுவனம் சாராத, வேளாண் சாராத சிறு மற்றும் குறு தொழில் முனைவோர்கள்,

வருமானம் ஈட்டும் நடவடிக்கைகளுக்காக 10 லட்சம் ரூபாய் வரை எளிதான, எந்தவித பிணையமில்லாத சிறு கடன்கள் பெறுவதை எளிதாக்குவதற்காக 2015 ஆம் ஆண்டு ஏப்ரல் 08 ஆம் தேதியன்று தொடங்கப்பட்டது.

- 2023-24 ஆம் ஆண்டில் PMMY திட்டத்தின் கீழ் 66.8 மில்லியன் கடன்கள் வழங்கப் பட்டு உள்ளன என்ற நிலையில் இதன் மதிப்பு 5.4 டிரில்லியன் ரூபாய் ஆகும்.

### பெருந்தொற்று நிதி திட்டம்




- கால்நடைகளுக்கான ஒரு முழுமையான சுகாதாரக் காப்பீட்டை உருவாக்குவதற்காக 25 மில்லியன் டாலர் மதிப்பிலான G20 பெருந்தொற்று நிதியை மத்திய அரசு செயல் படுத்த உள்ளது.
- விலங்கினச் சுகாதார ஆய்வகங்களை நன்கு மேம்படுத்துதல் மற்றும் விரிவுபடுத்துதல் மற்றும் ஆய்வக வலையமைப்புகளை மேம்படுத்துதல் ஆகியவற்றின் மூலம் நாட்டின் "விலங்கு சுகாதாரப் பாதுகாப்பை" மேம்படுத்துவதற்காக இது வடிவமைக்கப் பட்டு உள்ளது.
- இது "விலங்குவழித் தொற்று" நோய்களைக் கண்காணிப்பதற்கும் அவற்றை மிக நன்கு மேலாண்மை செய்வதற்குமான நன்கு ஒருங்கிணைந்த அமைப்பை உருவாக்கும்.
- இந்த நிதித் திட்டமானது, ஆசிய மேம்பாட்டு வங்கி (ADB), உலக வங்கி மற்றும் உணவு மற்றும் வேளாண்மை அமைப்பு (FAO) ஆகியவற்றுடன் இணைந்து செயல்படுத்தப்பட உள்ளது.


## அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்

### க்ளோஸ்ட்ரிடியோய்ட்ஸ் டிஃபிசைல் தடுப்பூசி

- மிகவும் அதிகத் தொற்றுத்தன்மை மிக்க மற்றும் சிகிச்சையளிப்பதற்குக் கடினமான க்ளோஸ்ட்ரிடியோயிட்ஸ் டிஃபிசைல் பாக்டீரியாவுக்கு எதிரான முதல் வெற்றிகரமான mRNA தடுப்பூசியை ஆராய்ச்சியாளர்கள் உருவாக்கியுள்ளனர்.
- C. டிஃபிசைல் என்ற பாக்டீரியாவானது பெருங்குடலின் மிக நீளமான பகுதியான முன் பெருங்குடலில் தொற்றுநோயை ஏற்படுத்துகிறது.
- இந்த நோய்த்தொற்று ஆனது பெரும்பாலும் நுண்ணுயிர் எதிர்ப்பு மருந்துகளின் பயன்பாட்டிற்குப் பிறகு ஏற்படுகிறது என்பதோடு இது பெரும்பாலும் முக்கியமாக மருத்துவமனைகளில் அல்லது மிகவும் நீண்ட கால நலப் பராமரிப்பு வசதிகளில் உள்ள

வயதான பெரியவர்களைப் பாதிக்கிறது.

- ❖ இதனால் பாதிக்கப்பட்ட நபர்களில் சுமார் மூன்றில் ஒரு பகுதியினருக்கு இத்தொற்று மீண்டும் மீண்டும் ஏற்படுகிறது.




# சுற்றுச்சூழல் செய்திகள்

## குதிக்கும் சிலந்திகளின் புதிய இனம்



- ❖ தென்னிந்தியா முழுவதும் காணப்படும் 'தென்கானா' என்ற குதிக்கும் சிலந்திகளின் ஒரு புதிய இனத்தை சிலந்திப் பேரின ஆராய்ச்சியாளர்கள் கண்டறிந்துள்ளனர் என்ற நிலையில் இது முன்னர் அறியப்பட்ட இரண்டு இனங்களை உள்ளடக்கியதாகும்.
- ❖ கர்நாடகாவில் தென்கனா ஜெயமங்கலி என்ற புதிய இனத்தையும் கண்டறிந்துள்ளனர்.
- ❖ இந்தப் புதிய குழுவானது குதிக்கும் சிலந்திகளின் ப்ளெக்ஸிப்பினா என்ற ஒருதுணைப் பிரிவைச் சேர்ந்தது.
- ❖ ஆனால் இது ஹைலஸ் மற்றும் டெலமோனியா போன்ற இதனுடன் தொடர்புடையக் குழுக்களில் இருந்து வேறுபட்டதாகும்.
- ❖ முன்னதாக கொலோப்சஸ் பேரினத்தில் இடம் பெற்ற இரண்டு இனங்கள் தற்போது

புதிய பேரினத்திற்கு மாற்றப்பட்டுள்ளன.

- அவை தென்கனா மனு (தென் இந்தியா மற்றும் இலங்கையில் காணப்படுகிறது) மற்றும் தென்கனா அர்காவதி (கர்நாடகாவில் காணப்படுகிறது) ஆகியனவாகும்.
- முதன்முறையாக தென்கன ஜெயமங்கலி, கர்நாடகாவில் உள்ள ஜெயமங்கலி நதியின் பெயரால் பெயரிடப்பட்டுள்ளது.

## ஆசியத் தங்கநிறப் பூனை




- ஆசியத் தங்க நிறப் பூனையானது (கேட்டோபுமா டெம்மின்ச்கி) அசாமின் மனாஸ் தேசியப் பூங்காவில் தென்பட்டுள்ளது.
- இது கடைசியாக 2007 ஆம் ஆண்டில் தென்பட்டது.
- வடகிழக்கு இந்தியத் துணைக்கண்டம், தென்கிழக்கு ஆசியா மற்றும் தெற்கு சீனாவில் காணப்படுகின்றன.
- 1972 ஆம் ஆண்டு இந்திய வனவிலங்கு (பாதுகாப்பு) சட்டத்தின் முதல் அட்டவணையின் கீழ் இந்த இனங்கள் பாதுகாக்கப்படுகின்றன.
- இது IUCN அமைப்பின் செந்நிறப் பட்டியலில் 'அச்சுறுத்தல் நிலையினை அண்மித்த ஒரு இனமாக' பட்டியலிடப் பட்டுள்ளது.


## புதிய சுற்றுச்சூழல் தாங்கு மண்டலங்கள்

- அருணாச்சலப் பிரதேச மாநிலத்திலுள்ள நாம்தாபா தேசியப் பூங்கா & புலிகள் வளங் காப்பகம் மற்றும் கம்லாங் வனவிலங்குச் சரணாலயம் & புலிகள் வளங்காப்பகம் ஆகியவை சுற்றுச்சூழல் தாங்கு மண்டலங்களாக (ESZ) நியமிக்கப்பட்டுள்ளன.
- முதலில் காப்புக்காடாக நியமிக்கப்பட்ட நாம்தாபா புலிகள் வளங்காப்பகம் ஆனது, 1972 ஆம் ஆண்டில் வனவிலங்குச் சரணாலயமாக அறிவிக்கப்பட்டது.
- இது 1983 ஆம் ஆண்டில் தேசியப் பூங்காவாகவும் பின்னர் புலிகள் வளங்காப்புத் திட்டத்தின் கீழ் புலிகள் வளங்காப்பகமாகவும் மாற்றப்பட்டது.
- கம்லாங் நதியானது கம்லாங் வனவிலங்கு சரணாலயத்தின் வழியாக பாய்கிறது.
- ஹூலாக் கிப்பன் மற்றும் இருவாச்சி (ஹார்ன்பில்ஸ்) போன்ற சில உயிரினங்களின் பாதுகாப்பிற்கு இந்தச் சரணாலயம் முக்கியமானதாகும்.

- 2024 ஆம் ஆண்டு பிப்ரவரி மாதத்தில், பாக்கே புலிகள் வளங்காப்பகம் அதே ESZ பிரிவில் சேர்க்கப் பட்டது.




## காடர் பழங்குடியினரின் மறுசீரமைப்பு முயற்சி




- முதன்முதலில், கேரளாவின் வாழச்சல் பகுதியினைச் சேர்ந்த காடர் பழங்குடியினர், ஊடுவக் கூடிய அயல் உயிரினங்களால் தரமிழந்த இயற்கைக் காடுகளைத் தீவிரமான நடவடிக்கைகளுக்காக ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.
- இந்தப் பகுதிகளில் மொத்தம் 29 மற்றும் 31 ஊடுருவல் இனங்கள் பதிவு செய்யப் பட்டு உள்ளன.
- காடர் இனத்தவர் முதன்மையாக கேரளா மற்றும் தமிழ்நாடு காடுகளில் வசிக்கும் ஒரு பழங்குடியினச் சமூகத்தவர் ஆவர்.
- காடர் பழங்குடியினர் எளிதில் பாதிக்கப்படக்கூடியப் பழங்குடியினர் குழுவாக (PVTG) வகைப்படுத்தப் பட்டுள்ளனர்.
- "காடர்" என்ற இந்தப் பெயரானது தமிழ் மற்றும் மலையாள மொழிகளில் காடு என்று

பொருள்படும் "காடு" என்ற சொல்லிலிருந்துப் பெறப்பட்டது.

- அவர்கள் தமிழ் மற்றும் மலையாள மொழிகளின் தாக்கத்தினைக் கொண்ட காடர் அல்லது காடர்ஸ் எனப்படும் திராவிட மொழியைப் பேசுகிறார்கள்.
- அவர்கள் தங்கள் வாழ்வாதாரத்திற்காக வன விளைச்சல் பொருட்களைப் பெரிதும் சார்ந்துள்ளனர்.

# அறிக்கைகள் மற்றும் குறியீடுகள்

## சட்டத்தின் ஆட்சிக் குறியீடு 2023

**South Asia**

| Regional Rank | Country/Jurisdiction | Overall Score* | Annual % Change in Overall Score* | 5-year % Change in Overall Score* | Global Rank | Change in Global Rank† | Regional Rank | Country/Jurisdiction | Overall Score* | Annual % Change in Overall Score* | 5-year % Change in Overall Score* | Global Rank | Change in Global Rank† |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 1/6 | Nepal | 0.52 | -0.9% | -2.2% | 71 | 0 | 4/6 | Bangladesh | 0.38 | -1.5% | -6.2% | 127 | 2 ▲ |
| 2/6 | Sri Lanka | 0.50 | -0.5% | -5.2% | 77 | 1 ▼ | 5/6 | Pakistan | 0.38 | -2.3% | -4.2% | 130 | 1 ▲ |
| 3/6 | India | 0.49 | -0.7% | -4.8% | 79 | 0 | 6/6 | Afghanistan | 0.32 | -4.0% | -8.3% | 140 | 0 |

- உலக நீதித் திட்டம் (WJP) என்ற அமைப்பினால் வெளியிடப்பட்ட சமீபத்தியக் குறியீட்டு மதிப்பில் இடம் பெற்ற 142 நாடுகளில் இந்தியா 79வது இடத்தில் உள்ளது.
- இந்தியாவை விட நேபாளம் (69), இலங்கை (75) ஆகியவை முன்னிலையில் உள்ளன.
- இந்தப் பட்டியலில் டென்மார்க் முதலிடத்திலும், நார்வே, பின்லாந்து மற்றும் சுவீடன் ஆகிய நாடுகள் அடுத்தடுத்த இடங்களிலும் உள்ளன.
- வங்காளதேசம் 127வது இடத்திலும், பாகிஸ்தான் 129வது இடத்திலும், ஆப்கானிஸ்தான் 140வது இடத்திலும் உள்ளன.
- வெனிசுலா மிகக் குறைந்த தரவரிசையைப் பெற்று 142வது இடத்தைப் பெற்றது.
- உலக நீதித் திட்டம் என்பது அமெரிக்காவை மையமாகக் கொண்ட ஒரு சர்வதேச பொதுச் சமூகம் ஆகும்.

# இதரச் செய்திகள்

## சோஹ்ராய் ஓவியங்கள்

- BRICS நாடுகளின் மாநாட்டின் போது ரஷ்ய அதிபர் விளாடிமிர் புடினுக்கு இந்தியப் பிரதமர் சோஹ்ராய் ஓவியத்தைப் பரிசாக வழங்கினார்.
- சோஹ்ராய் ஓவியங்கள் ஆனது, ஜார்க்கண்ட் மாநிலம் ஹசாரிபாக் பகுதியின் ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்புப் பொருளாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.
- திருவிழாக்கள் மற்றும் அறுவடைக் காலங்களில் பெண் கலைஞர்களால் அவை

உருவாக்கப் படுகின்றன.

❖ இது இயற்கை நிறமிகள் மற்றும் கிளைகள், நெல் வைக்கோல் மற்றும் விரல்கள் போன்றவற்றைப் பயன்படுத்தி எளிய முறையில் தயாரிக்கப் படுகின்றன.




★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★